2nd December 1970]

திரு. கே. எஸ். மணி : இப்பொழுது கவர்ன்மெண்ட் டைரக்டாகப் போட்ட ''காமன் வெல்'' உருப்படவில்லை.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : காமன் வெல்லே உருப்படவில்லையென்றால், இது உருப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஆகையினாலே, அவர்களே கிணற்றை வெட்டி, பம்ப் செட் அமைத்து, தண்ணீரைக் கொடுத்து அதைப் பராமரிப்பதற்கு ஏற்படும் செலவுகளை அந்த விஸ்தீரணத்துக்குத் தகுந்தபடி வசூலித்துச் செய்யலாம் என்பதுதான் எங்கள் கருத்தே தவிர, அவர்களுக்குத் தண்ணீர் கொடுப்பதற்கான வசதிகளைச் செய்துகொடுப்பதிலே கருத்து வேற்றுமை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*திரு. கே. ராஜாராம் : நான் முதலிலேயே சொன்னேன், இது மாதிரி இன்கம்டாக்ஸ் செலுத்துபவர்கள் இதில் புகுந்துவிடாமல் ஏதாவது வழி செய்ய அரசாங்கம் ஏற்பாடு பண்ணுமா என்று. அவர் அவர்கள் இஷ்டப்படி கிராப்பைப் போட்டுக் கொள்வதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டும், இப்பொழுது தடையாக இருக்கிறது என்றேன். அமைச்சர் அவர்கள் கவனம் வேறு பக்கம் திரும்பிவிட்டதனால் இந்த இரண்டின்பேரிலும் அபிப்பிராயத்தைச் சொல்ல விட்டுவிட்டார்கள். ஆகவே அந்த இரண்டை மட்டுமேனும் அமைச்சர் அவர்களின் கவனத்துக்குக் கொண்டுவந்து முடித்துக்கொள்கிறேன்.

7-10 p.m.

DEPUTY CHAIRMAN : The question is—

"That the Tamil Nadu Co-operative Societies (Second Amendment) Bill, 1970, (L.A. Bill No. 38 of 1970), as passed by the Assembly, be passed."

The motion was put and carried and the Bill was passed.

(5) *The Tamil Nadu Co-operative Societies (Third Amendment)* **Bill**, 1970 (*L.A. Bill No.* 41 *of* 1970)

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : உதவித் தலைவர் அவர்களே தமிழ்நாடு 1970'ஆம் ஆண்டு கூட்டுறவு சங்கங்களின் 3-வது திருத்த மசோதாவை (தமிழ் நாடு மசோதா எண். 41/1970) தமிழகச் சட்டமன்றத்தில் நிறைவேறியவாறு இவ்வவை ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் முன் மொழிகிறேன். இது அப்பக்ஸ் சொசைடிஸ், உச்ச நிலையிலே இருக்கப்படுகிற ஒரு சில சங்கங்களைப் பொருத்தது. அதற்கு ஏன் இந்த மசோதா தேவைப்படுகிறது என்ற காரணங்கள் ஏற்கெனவே அச்சிடப்பட்டு உறுப்பினர்களுக்கெல்லாம் வழங்கப்பட்டிருக்கின்றன. அதற்கு மேற்கொண்டு சொல்லத் தேவையில்லை என்று கருதுகிறேன். ஆகவே இதை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

---

* Printed as Appendix VI

2nd December 1970]

DEPUTY CHAIRMAN : Motion moved—

"That the Tamil Nadu Co-operative Societies (Third Amendment) Bill, 1970 (L.A. Bill No. 41 of 1970), as passed by the Assembly, be taken into consideration for making recommendations."

*திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, குறிப்பிட்ட ஒரு காரியத்துக்காகத்தான் இந்த மசோதா வந்திருக்கிறது என்று நினைக்கின்றேன். நமது மாநிலத்தில் மாநில நெசவாளரின் கூட்டுறவுச் சங்கம் இருக்கின்றது. இதிலே இருக்கும் தலைவருக்கும் இவர்களுக்கும் ஒரு தகராறு வந்திருக்கிறது. இந்த சட்டமே அதற்காகத்தான் வந்திருக்கிறது என்று நினைக்கிறேன். 73 ஜே செகண்டு ப்ராவிசோ :

"Provided that the number of nominated members shall not exceed one-fifth of the total number of members of the Board."

அடுத்த பிராவிசோ

"Provided further that the existing members of the board on the notified date shall, subject to the provision of Section 28, continue as members of the Board constitute for the first time after the notified date, until the expiry of their existing term of office as members.

அங்கத்தினர்கள் மட்டும் நீடித்து இருப்பதற்கும் தலைவர் மட்டும் விலகிப் போவதற்கும் வழி செய்வதற்காகத்தான் இந்தச் சட்டம். இதை வேறு வகையில் செய்திருக்கலாம். இதற்கு ஒரு பெரிய சட்டம் கொண்டுவந்து பெரிய ஆளாக அவரை ஆக்க வேண்டிய அவசியமில்லை. இதற்குச் சட்டமே அவசியமில்லை என்பது என்னுடைய அபிப்பிராயம். வேறு முக்கிய காரியங்கள் எதுவும் இல்லை. அபக்ஸ் சொசைடி என்று சொல்லும்போது, அதைச் சாதிப்பதற்கு இது தேவையில்லை. அதற்காகத்தான் இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

*மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, கைத்தறி சங்கம் மட்டும் என்பது தவறு. இதைப் போல, இன்னும் 8, 9 தனியாக உள்ள உச்சநிலை அப்பக்ஸ் சொசைடிஸ் மாநில அளவில் இருக்கின்றன. உதாரணமாக, எடுத்துக் கொள்ள வேண்டுமானால், வீடு கட்டுகின்ற சங்கங்கள், பால் சங்கங்கள், பனை வெல்ல சங்கங்கள் இன்னும் எத்தனையோ சங்கங்கள் இருக்கின்றன. ஆகையினால் இது எல்லா சங்கங்களுக்கும் பொருந்தக் கூடிய ஒரு சட்டமாகும். தனிப்பட்ட எவரையும் கருத்தில் கொண்டு கொண்டுவந்த சட்டமல்ல இது என்று கூறி இதை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

THE DEPUTY CHAIRMAN : The question is—

"That the Tamil Nadu Co-operative Societies (Third Amendment) Bill, 1970 (L.A. Bill No. 41 of 1970), as passed by the Assembly, be taken into consideration for making recommendations."

The motion was put and carried and the Bill was taken up for making recommendations.

DEPUTY CHAIRMAN : As there are no recommendations, the Bill
7-15 p.m. will be returned to the Assembly without any recommendations.

The House will now adjourn and meet again at 10 a.m. tomorrow.

The House then adjourned.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS